

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதிய சி.டி.ஸ்கேன் மையம் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிதாக கூடுதல் கட்டடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், திருச்செங்கோடு ஜல்லிக்கட்டு பேரவை தலைவருமான எஸ்.எம்.மதுரா செந்தில் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.








அரியலூர் மாவட்ட கழகக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் சிவ.மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் உரையாற்றினார். உடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், அரியலூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் கவிஞர் சல்மா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### எத்தனை சோதனைகள் மேற்கொண்டாலும்

# நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றியைத் தடுக்க முடியாது!

## அமைச்சர் செந்தில்பாலாஜி பேட்டி!

கரூர், மே.31-

எத்தனை சோதனைகள் மேற்கொண்டாலும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றியை தடுக்க முடியாது என அமைச்சர் வி. செந்தில் பாலாஜி கூறினார்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கரூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். பின்னர் அமைச்சர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-



வருமான வரித்துறை சோதனை நடைபெறும் நிறுவனங்கள் எல்லாம் நான் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது உள்ள நிறுவனங்கள். எனக்கு வேண்டியவர்கள் அவர்களது நண்பர்கள் என செவி வழி செய்தியாக எனக்கு தொடர்புடைய இடங்களில் சோதனை நடைபெறுகிறது என செய்திகள் வந்து கொண்டிருக்கிறது. வருமானவரிச் சோதனைக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்போம். சோதனைகள் முடிந்த பிறகு முழு விவரங்கள் தெரியவரும். சுவர் ஏறி குதித்து உள்ளே வந்தது. இரண்டு பெரிய பைகளை கொண்டு வந்ததன் காரணமாக கேள்விகள் கேட்கப்பட்டு வாக்குவாதம் நடைபெற்றிருக்கிறது.

யார் வீட்டிலும் திடீரென்று உள்ளே நுழையும் போது அடையாள அட்டை காண்பியுங்கள் என்று கேட்பது வழக்கம். கதவை தட்டும் போது நீங்கள் யார் என கேட்டு கதவை திறப்பது வழக்கம். அந்த அடிப்படையில் மாவட்ட காவல் அதிகாரி தகவல் இல்லை என கூறியதை எதிர்க்கட்சித் தலைவர் புரிந்து கொள்ளாமல் விமர்சித்துள்ளார். அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதற்கு லாயக்கற்றவர். வேலுமணி போன்றவர்கள் வீட்டில் சோதனை நடைபெற்ற போது கட்சிக் காரர்களை அங்கே கொண்டுவந்து குவித்து மூன்று வேளை அவர்களுக்கு சாப்பாடு அளித்து போக்குவரத்துக்கு இடையூறு செய்து அதிகாரிகள் கடமையைச் செய்ய விடாமல் தடுத்தது போல இங்கு எதுவும் நடைபெறவில்லை.

சந்தேகப்பட்டு அங்கு வந்தவர்களையும் உடனடியாக அங்கிருந்து செல்லுமாறு கூறி தற்போது சோதனை சமூகமாக நடைபெற்று வருகிறது.

சொந்த தொகுதியிலேயே வெற்றி பெற முடியாமல் தோல்வியடைந்து மக்களால் புறக்கணிக்கப்பட்டவர் ஜெயக்குமார். தொலைக்காட்சிகளில் காமெடியனாக வந்து போய்க்கொண்டிருக்கிறார். அவரது கூற்றுக்கெல்லாம் நான் பதில் அளிக்க விரும்பவில்லை.

சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது தலைவர் தளபதி அவர்கள் மகள் வீட்டிலேயே சோதனை நடத்தினார்கள் அதனை இயல்பாக எடுத்துக் கொண்டு வெற்றிகரமாக பிரச்சாரத்தை முடித்து வெற்றி பெற்றவர் தான் தளபதி அவர்கள். சட்டமன்றத் தேர்தலின் போது நான் வாக்கு சேகரித்துக் கொண்டிருந்த சமயத்தில் ரைடு நடத்தினார்கள். எத்தனையோ ரெய்டுகளை சந்தித்து இருக்கிறேன். இன்னும் எத்தனை ரைடு வந்தாலும் சந்திப்பேன். ஓராயிரம் சோதனைகளை நடத்தினாலும் சரி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகின்ற நலத்திட்டங்களினால் இந்த அரசுக்கு மிகப் பெரிய வரவேற்பினை மக்கள் அளித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு மிகப் பெரிய வரவேற்பினைபெற்றிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலில் பாண்டிச்சேரி உள்ளிட்ட 40 தொகுதியிலும் நாங்கள் வெற்றி பெறுவதை எத்தனை ரைடு நடத்தினாலும் தடுக்க முடியாது என்றார்.

### கொல்லிமலை அரசு மருத்துவமனையில்

# புதிய இரத்த வங்கி - குடியிருப்புகள் - கட்டிடங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

நாமக்கல், மே.31-

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டம், கொல்லிமலை அரசு மருத்துவமனையில் நேற்று முன்தினம் (29.05.2023) நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய இரத்த வங்கி, எர்ணாபுரம் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பச்சுடையாம்பட்டி புதூர் துணை சுகாதார நிலையத்தில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சுகாதார நிலைய கட்டடம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய புற நோயாளிகள் பிரிவு கட்டடத்தையும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் எ.கே.பி.சின்ராஜ், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கு.பொன்னுசாமி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:

கொல்லிமலை வட்டார மருத்துவமனையில் புதிய இரத்த வங்கி திறந்து வைக்கின்ற நிகழ்விற்கும், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய புற நோயாளிகள் பிரிவு கட்டடம் திறந்து வைக்கின்ற நிகழ்வும், எர்ணாபுரம் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வட்டார பொது சுகாதார அலகு கட்டடம் திறந்து வைக்கின்ற நிகழ்வும், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பச்சுடையாம்பட்டி புதூர் துணை சுகாதார நிலையத்தில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சுகாதார நிலைய கட்டடம் திறந்து வைக்கின்ற நிகழ்வும், இந்த நிகழ்ச்சியின் மூலம் இன்றைய தினம் ரூ.1.77 கோடி இலட்சம் மதிப்பீட்டில் இரத்த வங்கி மற்றும் மருத்துவத்துறைக்கு சம்பந்தப்பட்ட கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கொல்லிமலை வட்டார அரசு மருத்துவமனையில் ரூ.47 இலட்சம் ரூபாய் செலவில் இரத்த வங்கி மையம் ஒன்று புதிதாக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. மலைப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்கு இரத்தம் தேவைப்படுகிற சமயங்களிலும், கர்ப்பிணி தாய்மார்களுக்கு சிசேரியன் போன்ற அறுவை சிகிச்சைகளின் மூலம் குழந்தைகளை பெற்றெடுக்க வேண்டிய நிலைகளிலும் கர்ப்பப்பை அறுவை சிகிச்சை போன்ற நிலையில் இரத்த பெருக்கு அதிகமாக ஏற்படுகிற சூழ்நிலையின் காரணமாக இரத்தம் செலுத்த வேண்டியது என்பது அவசியமான ஒன்றாக இருக்கிறது. மலைவாழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு இன்றைய தினம் இரத்த வங்கி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கொல்லிமலை பகுதியில் இருந்து சிரமப்பட்டு தரைப் பகுதிக்கு சென்று சமதள பகுதிக்கு சென்று அங்கிருந்து இரத்தத்தை பெற்று வந்து இந்த பகுதி மக்களுக்கு செலுத்தும் போது அதனால் ஏற்படுகிற கால தாமதத்தினால் ஏராளமான உயிர் இழப்புகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலினை பெற்று கடந்த நிதி நிலை அறிக்கையில் சென்னை - பெரியார் நகர், நீலகிரி மாவட்டம் - கோத்தகிரி, நாமக்கல் மாவட்டம் - கொல்லிமலை ஆகிய மூன்று பகுதிகளில் இரத்த வங்கி அமைக்கப்படும் என்ற அறிவிப்பின்படி, மூன்று இடங்களில் ரூ 1.47 கோடி மதிப்பீட்டில் இரத்தம் வங்கி மையம் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ள இரத்த வங்கிக்கு மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் 350 மில்லி இரத்தம் தானமாக வழங்கியுள்ளார். வனத் துறை அமைச்சர் அவர்கள் இரத்தம் தானம் வழங்குவதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்வதற்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

கொல்லிமலை அரசு மருத்துவமனை மேம்பாட்டிற்காக சுற்றுச்சுவருடன் கூடிய பிரேத பரிசோதனை கூடம் ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் அமைத்திடவும், மருத்துமனையில் பணிபுரியும் செவிலியர்களுக்கான 4 குடியிருப்புகள் ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் அமைத்திடவும், மருத்துவர்களுக்கான 4 குடியிருப்புகள் ரூ.2.10 கோடி மதிப்பீட்டில் அமைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிதித்துறைக்கு கோப்புகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் பெற்றவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் கொல்லிமலை அரசு மருத்துவமனையில் செவிலியர் காலி பணியிடங்கள் நிரப்ப மாவட்ட சுகாதார பேரவை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

கொல்லிமலையில் மூலிகைச் செடிகள் அதிக அளவில் உள்ளது. சித்த மருந்துகளை தயாரிக்கும் டாம்கோல் நிறுவனத்தின் ஒரு சிறிய அமைப்பினை கொல்லிமலையிலும் உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நாமக்கல் மாவட்டத்தில் 60 படுக்கைகளுடன் கூடிய சித்த மருத்துவமனை விரைவில் தொடங்கப்படும். அதனைத் தொடர்ந்து அடுத்த ஓராண்டிற்குள் சித்த மருத்துவக் கல்லூரியும் தொடங்கப்படும். தமிழ்நாட்டில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் அமைப்பதற்கு மசோதா நிறைவற்றப்பட்டு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைக்க பெற்றவுடன் சென்னையில் தொடங்கப்படவுள்ளது. இப்பல்கலைக் கழகத்திற்கான ஆராய்ச்சி மையம் தேவைப்படும் பொழுது இந்த கொல்லி மலை பகுதியை பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த நிதிநிலை அறிக்கையில் 69 வது அறிவிப்பாக மலைவாழ் பகுதியில் வசிக்கும் அனைவருக்கும் இரத்த சோகை குறித்த ஹீமோகுளோமினோபதி நோய் கண்டறியும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். மேலும் ஹீமோகுளோமினோபதி நோய்க்கான உயிர் காக்கும் உயர் ரக மருந்துகள் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையானது எல்லக்கரை கிராமத்தில் தொடங்கி வைக்கப் படவுள்ளதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு.மணிமேகலை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.அ.சண்முகக்கனி, இணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.விஜயலட்சுமி, இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.அ.ராஜ் மோகன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.பூங்கொடி, அட்மாக்குழுத் தலைவர் திரு.செந்தில் முருகன் ஆகியோர் உட்பட அரசுத் துறை அலுவலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்டத்தில்

# பத்திரிகையாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டைகள்!

## செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

திருப்பூர், மே 31 -

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 27.05.2023 சனிக்கிழமை அன்று செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த 39 பத்திரிகையாளர்களுக்கு முதற்கட்டமாக பத்திரிக்கையாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்.

அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழகத்தில் சிறப்பான ஆட்சியை நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தலில் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் பத்திரிக்கையாளர் மற்றும் ஊடக துறையினரின் நலனில் மிகுந்த அக்கரை கொண்டு பத்திரிக்கையாளர்களுக்கென தனி நலவாரியம் உருவாக்கி தந்துள்ளார்கள். அதனை செயல்படுத்தும் வகையில், இத்துறையின் அமைச்சர் என்கிற முறையில் அலுவல் சார்ந்து அரசு விதிமுறைக்கு உட்பட்டு நலவாரியம் அறிவித்த பிறகு 3 கூட்டங்கள் நடைபெற்று பல்வேறு நிகழ்வுகள் முடிவுளாக எடுக்கப்பட்டது. பத்திரிக்கையாளர்களுக்கு நலவாரிய உறுப்பினர் அட்டை வழங்கிடும் வகையில் கடந்த 11.05.2023 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பத்திரிக்கையாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, இதுவரை 38 மாவட்டங்களில் சென்னை உட்பட 2,680 பத்திரிக்கையாளர்களுக்கு நலவாரிய உறுப்பினர் அட்டை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா காலத்தில் பத்திரிக்கையாளர்கள் முன்களப்பணியாளர்களாக அறிவித்து ரூ.5,000 ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. மேலும், பணியின் போது கொரோனாவால் மறைந்த பத்திரிக்கையாளர்களுக்கு ரூ.10.00 இலட்சம் வழங்கப்பட்டது. 10 ஆண்டு காலமாக பணியாற்றியவர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.12,000 மற்றும் அவர்களுக்குப் பின் அவர்களது குடும்பங்களுக்கு ரூ. 6,000 வழங்கப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் நீங்களும் அரசுக்கு உறுதுணையாக இருந்து செய்திகளை பொது மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செ.கு.சதீஸ்குமார் உள்பட பத்திரிக்கையாளர் பலர் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு!



நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம் இன்று (31.05.2023 - புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு திருச்செங்கோடு, வேலூர் ரோடு, C.H.B காலனியில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது. மாவட்ட அவைத் தலைவர். இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற உள்ள கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா

புதியதாக கழக உறுப்பினர் சேர்த்தல் துரிதபடுத்துதல் தொடர்பாக.

கழக ஆக்கப் பணிகள்

**எஸ்.எம்.மதுரா செந்தில்,**

செயலாளர். - நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.



புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஜூன் 5ம் தேதி வருகை தரவுள்ள தமிழக முதல்வர் ஜல்லிக்கட்டு பாதுகாவலர் தலைவர் தளபதி அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி ஏற்பாட்டு குறித்து திருமயம் தொகுதி மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நச்சாந்துப்பட்டி மலைய கோவில் மிஸ்டர் ஜே மஹாலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழக சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான எஸ். ரகுபதி ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜெயராமன், ஒன்றியச் செயலாளர்கள் அ.முத்து, ஆறு.சிதம்பரம், அ.அடைக்கலமணி, கணேசன், வி.ஆர்.இளையராஜா மற்றும் மாவட்ட ஒன்றிய நகரக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் டி.ஏ.நாகராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், பரிதா நவாப், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், அஸ்லாம், நாகராசன், கோதண்டன், சித்ரா சந்திரசேகர், கிருஷ்ணகிரி நகரச் செயலாளர் நவாப், ஒன்றியச் செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், சுப்பிரமணி, மகேந்திரன், சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், நரசிம்மன், குணவசந்தரசு, எக்கூர் செல்வம், ரஜினி செல்வம், குமரேசன், பேரூர்க் கழகச் செயலாளர்கள் பாபு, வெங்கடப்பன், பாபு சிவகுமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.